
# 13 அக்டோபர் 2023- தினசரி நடப்பு நிகழ்வுகள் .

| | |
|---|---|
| **'இறையாண்மை கொண்ட பாலஸ்தீன நாடு' என்ற கோரிக்கையை இந்தியா வலியுறுத்துகிறது.** | **செய்தி:**<br>மனிதாபிமான கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கு "பொறுப்பு" வேண்டும் என்பதையும் மேலும் ஒரு **இறையாண்மை கொண்ட பாலஸ்தீன அரசை** உருவாக்குவதற்கான தனது அழைப்பை இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது .<br><br>**இந்தியாவின் நிலைப்பாடு:**<br>• பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் நிலைப்பாடு "நீண்டகால மற்றும் நிலையான" பாலஸ்தீனம் வேண்டும் என்பது ஆகும்.<br>• பாதுகாப்பான மற்றும் **அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இஸ்ரேலுடன் இணக்கமாக இருக்க வேண்டும்** என்பதையும் இறையாண்மை கொண்ட சுதந்திரமான மற்றும் சாத்தியமான பாலஸ்தீன நாட்டை அமைப்பதற்கான நேரடி பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதை இந்தியா எப்போதும் ஆதரிக்கிறது. |
| **சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 6.83% ஆக இருந்த நிலையில் செப்டம்பர் மாதத்தில் 5% ஆக குறைந்துள்ளது.** | **செய்தி:**<br>இந்தியாவின் சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 6.83% ஆக இருந்து செப்டம்பரில் 5.02% ஆக குறைந்தது, உணவுப் பொருட்களின் விலைகள் ஏறக்குறைய 10% இல் இருந்து 6.6% ஆக குறைந்துள்ளது.<br><br>**பணவியல் கொள்கை குழு (MPC):**<br>• பணவியல் கொள்கை குழுக்கான சட்டப்பூர்வ மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட கட்டமைப்பை வழங்குவதற்காக **நிதிச் சட்டம் 2016** மூலம் **இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934** திருத்தப்பட்டுள்ளது.<br>• **குறிப்பிட்ட இலக்கு நிலைக்குள்** பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கொள்கை விகிதத்தை (ரெப்போ விகிதம்) நிர்ணயிக்கும் பணி பணவியல் கொள்கை குழுக்கு வழங்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | • பணவியல் கொள்கை குழு **ஆறு உறுப்பினர்களை** கொண்டிருக்கும் அவை RBI ஆளுநர் (தலைவர்), பணவியல் கொள்கைக்கு பொறுப்பான RBI **துணை ஆளுநர்**, RBI வாரியத்தால் பரிந்துரைக்கப்படும் ஒரு அதிகாரி, மீதமுள்ள மூன்று உறுப்பினர்கள் இந்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.<br>• பணவியல் கொள்கை குழு **பெரும்பான்மை வாக்கெடுப்பின் அடிப்படையில்** முடிவுகளை எடுக்கிறது. சமநிலை ஏற்பட்டால் ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்கு இரண்டாவது அல்லது தீர்மானிக்கும் வாக்கு வழங்க படும் .<br>• பணவியல் கொள்கை குழுவின் முடிவு ரிசர்வ் வங்கியைக் **கட்டுப்படுத்தும்.** |
| **செப்டம்பரில் பணவீக்கம் 5% ஆக குறைந்தது.** | **முக்கிய தகவல்கள்:**<br>• ராஜஸ்தான் மற்றும் ஹரியானாவில் பணவீக்கம் 6.5 சதவீதமாக **அதிகரித்துள்ளது.**<br>• சத்தீஸ்கரில் பணவீக்கம் **1.98%** ஆகக் குறைந்தது.<br>• தமிழ்நாடு (4.5%), மத்தியப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் (3.7%), கேரளா (4.7%) உள்ளிட்ட எட்டு மாநிலங்களில் பணவீக்கம் **5 சதவீதத்திற்கும்** குறைவாக உள்ளது .<br>• செப்டம்பர் மாதத்தில் சுகாதார துறை 5.9% அதிகரித்துள்ளது மற்றும் தனிநபர் பராமரிப்பு போன்ற சேவைகளின் செலவுகள் 8.5% அதிகரித்துள்ளன மேலும் இவை தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. |
| **உலக பசி குறியீடு (GHI) 2023.**<br><br> | **செய்தி:**<br>• உலக பசி குறியீடு (GHI) 2023 இல் 125 **நாடுகளில் இந்தியா 111 வது இடத்தைப் பிடித்துள்ளது**. 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு பசிக்கு எதிரான அதன் முன்னேற்றம் சரிவை சந்தித்து வருகிறது .<br>• இந்த குறியீட்டின் தரவரிசையை உள்ள தவறான முறையை மேற்கோள் காட்டி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவின் செயல்திறனை குறித்து மத்திய அரசு மறுத்து |

| | |
|---|---|
| | வருகிறது .<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• இந்தியாவின் தரவரிசை 100 புள்ளிகள் கொண்ட உலகளாவிய பசி குறியீடு மதிப்பெண்ணில் **28.7** புள்ளிகளை பெற்றுள்ளது .<br>• இது இந்தியாவின் பசியின் தீவிரத்தை "கடுமையானது" என்று வகைப்படுத்துகிறது.<br>• உலக பட்டினி குறியீடு (GHI) என்பது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேசிய அளவில் பட்டினியை **முழுமையாக அளவிடுவதற்கும் மற்றும் அதனை கண்காணிப்பதற்கும்** ஒரு கருவியாக பயன்படுகிறது .<br>• உலக பட்டினி குறியீடு மதிப்பெண்கள் நான்கு கூறு குறிகாட்டிகளின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை:<br>1. ஊட்டச்சத்து குறைபாடு<br>2. குழந்தை வளர்ச்சி குன்றியது<br>3. குழந்தையின் உயரத்திற்கேற்ற எடையின்மை<br>4. குழந்தை இறப்பு<br>• உலக பட்டினி குறியீடு மதிப்பெண், பசியின் தீவிரத்தை பிரதிபலிக்கும் 100 புள்ளி அளவிலான மதிப்பீட்டில் கணக்கிடப்படுகிறது - பூஜ்ஜியம் சிறந்த மதிப்பெண் ஆகும் (பசி இல்லை என்பதைக் குறிக்கிறது) மற்றும் 100 மிக மோசமானது என குறிக்கிறது .<br>• உலகெங்கிலும் உள்ள ஐரோப்பிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் Concern Worldwide மற்றும் Welthungerhilfe ஆகியவற்றால்உலக பட்டினி குறியீடு தயாரிக்கப்படுகிறது. |
| **'LiFE: சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை' பற்றிய பாராளுமன்ற மன்றம்.** | **செய்தி:**<br>• ஒன்பதாவது ஜி-20 நாடாளுமன்ற சபாநாயகர் உச்சிமாநாட்டிற்கு(பி-20) முன்னதாக 'LiFE: சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை என்ற தலைப்பில் சபாநாயகர் பாராளுமன்ற மன்றத்தில் உரையாற்றினார். |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

| | |
|---|---|
| <br> | • பி-20 உச்சிமாநாட்டிற்கு முந்தைய நிகழ்வு வாழ்க்கை முறை திட்டத்தை மையமாகக் கொண்டது.<br><br>**LiFE திட்டம் :**<br>• **LiFE** திட்டம் அல்லது சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை என்பது சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், தனிநபர் பாதுகாக்கவும் மற்றும் சமூக நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக இந்தியா தலைமையிலான உலகளாவிய பொதுமக்கள் இயக்கமாகும்.<br>• 2021 நவம்பரில் கிளாஸ்கோவில் நடைபெற்ற 26 வது ஐ.நா. பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் (COP26) இந்தியப் பிரதமரால் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.<br>• இந்தத் திட்டம், “ஒரு பில்லியன் இந்தியர்களையும், மற்ற நாடுகளில் உள்ள மக்களையும் நிலையான வாழ்க்கை முறையைப் பின்பற்றும் நபர்களாகத் திரட்ட வேண்டும்.<br>• உலக நாடுகள் மற்றும் தனிநபர்கள் மேற்கொண்டுள்ள நிலையான இலக்குகளை மற்றும் காலநிலை நடவடிக்கைகளை இந்த உலகளாவிய திட்டம் காண்பிக்கும்.<br>• இது P3 மாதிரியின் உணர்வை ஊக்குவிக்கிறது, அதாவது” **Pro Planet People”.**<br>• இது 'கிரகத்தின் வாழ்க்கை முறை, கிரகத்திற்காக மற்றும் கிரகத்தால்' என்ற அடிப்படைக் கொள்கைகளின்( ‘Lifestyle of the planet, for the planet and by the planet’) அடிப்படையில் செயல்படுகிறது. |
| **14 மாதங்களில் இல்லாத அளவுக்கு 10.3 சதவீதமாக தொழில்துறை உற்பத்தி குறியீடு(IIP) உயர்வு.** | **செய்தி:**<br>இந்தியாவின் தொழில்துறை உற்பத்தி ஆகஸ்ட் மாதம் 10.3% ஆக 14 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்வை அடைந்துள்ளது. மேலும் ஜூலை மாதத்தில் சாதகமான அடிப்படை விளைவுகளால் 6% உயர்வில் இருந்து திருத்தப்பட்டுள்ளது . |

<table>
<tr><td></td><td>

**தொழில்துறை உற்பத்தி குறியீடு(IIP) :**

- தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை ஆண்டைக் குறிக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தொழில்துறை உற்பத்தியின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருளாதார வளர்ச்சியின் முதன்மை குறிகாட்டிகளில் இதுவும் ஒன்றாகும்.
- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, குறிப்பிட்ட ஆண்டில் தொழில்துறையில் ஏற்படும் உற்பத்தியின் ஒப்பீட்டு மாற்றத்தை இது குறிக்கிறது.
- இது மத்திய புள்ளியியல் அமைப்பால் (CSO) மாதந்தோறும் கணக்கிடப்பட்டு வெளியிடப்படுகிறது.
- இந்தியாவில் IIP தொடருக்கான தற்போதைய அடிப்படை ஆண்டு 2011-12 ஆகும்.

**எட்டு முக்கிய துறைகள்:**

- இவை தொழில்துறை உற்பத்தி குறியீட்டில் உள்ளடக்கப்பட்ட பொருட்களின் எடையில் 40.27% ஆகும்.
- எட்டு முக்கிய துறைத் தொழில்கள் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இறங்கும் வரிசை முறையில் அமைக்கப்பட்டுள்ளன : சுத்திகரிப்பு பொருட்கள்> மின்சாரம்> எஃகு> நிலக்கரி> கச்சா எண்ணெய்> இயற்கை எரிவாயு> சிமெண்ட்> உரங்கள்.

</td></tr>
<tr><td>

**உலக மூட்டுவலி தினம்**




</td><td>

**செய்தி:**

**அக்டோபர்** 12 ஆம் தேதி உலக மூட்டுவலி தினமாகக் அனுசரிக்கப்படுகிறது .

**முக்கிய குறிப்புகள்:**

- இந்த ஆண்டு 2023 ஆம் ஆண்டு உலக மூட்டுவலி தினத்தின் கருப்பொருள் "வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மூட்டுவலி நோயுடன் வாழ்வது" என்பதாகும்.
- மூட்டுவலி என்பது மூட்டில் ஏற்படும் கோளாறு ஆகும். இதனால் மூட்டில் சுற்றியுள்ள மூட்டு

</td></tr>
</table>

| | |
|---|---|
| | திசுக்களையும், மற்ற இணைப்பு திசுக்களையும் பாதிக்கிறது இதன் மூலம் மூட்டு வலி மற்றும் இறுக்கம் ஏற்படுகிறது.<br>• மிகவும் பொதுவானது கீல்வாதம் மற்றும் முடக்கு வாதம் ஆகும் . |
| **இந்திய ஒலிம்பிக் கமிட்டியின் 141-வது அமர்வை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.** | **செய்தி:**<br>• மும்பையில் உள்ள ஜியோ உலக மையத்தில் நடைபெறும் **141-வது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி** (IOC) கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.<br>• சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி கூட்டத்தை இந்தியா நடத்துகிறது.<br>**முக்கிய குறிப்புகள்:**<br>• சர்வதேச ஒலிம்பிக் (IOC) அமர்வு , சர்வதேச ஒலிம்பிக் அமர்வின் (IOC) உறுப்பினர்களின் முக்கிய கூட்டமாக செயல்படுகிறது.<br>• ஒலிம்பிக் போட்டிகளின் எதிர்காலம் தொடர்பான முக்கிய முடிவுகள் IOC அமர்வுகளில் எடுக்கப்படுகின்றன.<br>• சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 141வது கூட்டத்தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது, சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும், விளையாட்டுத் திறமைகளை கொண்டாடுவதற்கும், நட்பு, மரியாதை மற்றும் திறமை ஆகிய ஒலிம்பிக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கும் இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது.<br>• இது பல்வேறு விளையாட்டு தொடர்பான பங்குதாரர்களிடையே தொடர்பு மற்றும் அறிவுப் பகிர்வுக்கான வாய்ப்பை வழங்குகிறது. |

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*